# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2055 ஜனவரி 4, 2025

Weekly E-paper • January 4, 2025




# கலங்கிய குட்டையில்...

சுப. வீரபாண்டியன்

**கன்னியாகுமரி கண்ணாடி பாலம் திறப்பு விழா**

**உதயசூரியன் உள்ளவரை...!**

தலையங்கம்

**அழைப்பு விடுத்தார் சாவர்க்கர் நிராகரித்தார் அம்பேத்கர்!**

எழில்.இளங்கோவன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2055 ஜனவரி 4, 2025 Weekly E-paper • January 4, 2025


## கலங்கிய குட்டையில்...

**சுப. வீரபாண்டியன்**

உண்மையான பெண்களின் பாதுகாப்பில் அக்கறை செலுத்தாமல், எதிர்க்கட்சிகள் இதனை அரசியல் ஆக்கிக் கொண்டிருக்கின்றன என்று உயர்நீதிமன்றமே சொன்னதற்குப் பிறகும், தமிழ்நாட்டில் பல கட்சிகள் அதே போக்கினைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெற்றிருக்கும் பாலியல் வன்கொடுமை கண்டிக்கத்தக்கதும், எதிர்காலத்தில் இப்படி ஏதும் நடந்து விடாமல் தடுக்கப்பட வேண்டியதும் ஆகும்! இதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை.

இப்போது அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதோடு, நீதிமன்ற விசாரணையும் தொடங்கி இருக்கிறது.

இதனை மேலும் விரைவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ள வேண்டிய கடமை, எதிர்க்கட்சியினருக்கு இருக்கிறது.

ஆனால் இதனையே காரணமாகக் காட்டித் தமிழ்நாடு அரசுக்கு இடையூறு செய்ய வேண்டும் என்று கருதுவது நல்ல அரசியல் ஆகாது!



ஆனால் அதனைத்தான் பல எதிர்க்கட்சிகள் செய்து கொண்டிருக்கின்றன.

அவர்களோடு சேர்ந்து, நம் கூட்டணிக் கட்சியில் இருப்போர் சிலரும் இதனைப் பெரிதாக்க முயற்சி செய்வது விரும்பத்தக்கதாக இல்லை!

இதனைச் சட்ட - ஒழுங்குப் பிரச்சினையாக மாற்றுவதற்கு எதிர்க்கட்சிகள் முயற்சி செய்கின்றன என்பது தெளிவாகத் தெரிகிறது!

அதற்கு என்ன உள்நோக்கம் இருக்கக்கூடும் என்பதும் எல்லோருக்கும் புரிந்த ஒன்றுதான்!

இப்படித்தான் சாம்சங் தொழிலாளர்கள் போராட்டம் நடத்திய போதும், அதனை மிகப்பெரிய சிக்கலாக மாற்றிட முயற்சிகள் நடைபெற்றன.

ஒருவர் அந்தத் தொழிலாளர்கள் மத்தியில் போய் நின்று, அடி உதை என்று பேசி, வன்முறையைத் தூண்டியதையும் நாம் பார்த்தோம்!

தமிழ்நாடு அரசு இந்த வழக்கில் மேலும் கூடுதல் கவனம் செலுத்தி, மிகக் கடுமையாகத் தண்டித்திட ஆவன செய்திட வேண்டும் என்பதே பொதுமக்களின் விருப்பமாக உள்ளது! •




# கன்னியாகுமரி கண்ணாடிப் பாலம் திறப்பு விழா















*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## உதயசூரியன் உள்ளவரை...!

முந்தைய ஆண்டு முடிந்துவிட்டது. புதிய ஆண்டு வந்துவிட்டது. மாற்றம் என்பது இயற்கையின் நியதி, மறுக்க முடியாது.

மாற்றம் என்பது வளர்ச்சியை நோக்கியதாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அதனால் எந்தப் பயனும் இருக்காது.

தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் கல்விக்கு குறிப்பாகப் பெண்கல்விக்கு மிக முன்னுரிமை கொடுத்து மாற்றங்களைச் செய்து வருகிறார். மகளிருக்கான வளர்ச்சி, மருத்துவத் துறையில் வளர்ச்சி, சென்னையைத் தொடர்ந்து தூத்துக்குடியில் 'டைடல் பார்க்', அந்நிய முதலீடுகளை பெருமளவு தமிழ்நாட்டிற்கு ஈர்ப்பது,

இதுபோன்ற மக்கள்நலத் திட்டங்களைக் கொண்டு வருவதன் மூலம் வளர்ச்சியை நோக்கிய மாற்றங்களைச் செய்து கொண்டு இருக்கிறார் அவர், தமிழ்நாட்டில்.

ஒன்றியப் பிரதமர் மோடியின் ஆட்சியில் இப்படிப்பட்ட வளர்ச்சிகள் எதுவும் வரவில்லை.

வழக்கம்போல வெளிநாடுகளில் சுற்றுவதும், நேரம் கிடைத்தால் நாடாளுமன்றம் வருவதும், அப்படி வந்தால் 'ஒரே நாடு ஒரே தேர்தல்', என்று உருப்படாத மசோதாக்களைக்கொண்டுவருவதும், நாடாளுமன்றத்தில் அதானி முறைகேடுகள், மணிப்பூர் வன்முறை போன்றவைகள் பேச அனுமதிக்க மறுப்பதும், இந்தியாவின் சட்டமேதை அம்பேத்கரை இழிவு படுத்துவதில் சுகம் காண்பது இவை எல்லாம் மாற்றத்திலும் அடங்காது, வளர்ச்சியிலும் வராதது!

அண்மையில் 'மன்கீ பாத்' நிகழ்ச்சியில் தமிழ்மொழியை ஓஹோவெனப் புகழ்ந்து தள்ளி இருக்கிறார், மோடி. இது கொஞ்சம் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது, நமக்கு.

அறிவுச் சூரியன், 'பேரறிவுச் சிலை' திருவள்ளுவரைப் பார்க்க ஒவ்வொரு நாளும் எழுந்து வந்து, 'திருக்குறளைப் படி - படி' எனச்சொல்லும் 'உதயசூரியன்' உள்ளவரை, குறள்வழியான ஆட்சியில் தமிழ்நாட்டில் மாற்றங்கள் வரும், வளர்ச்சியைத் தரும்.

அனைவருக்கும் உலகப் புத்தாண்டு வாழ்த்துகள்.

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**
உதவி ஆசிரியர்கள்:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**
வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## புத்தக் கண்காட்சி 2025 - கருஞ்சட்டைப் பதிப்பகம்




பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன், ஆ. லாரன்ஸ், இக்லாஸ், மனோகரன், லோகபாலன் உள்ளிட்டோர்

# அழைப்பு விடுத்தார் சாவர்க்கர் நிராகரித்தார் அம்பேத்கர்!


எழில்.இளங்கோவன்



தாமோதர் ஹால்,
பரேல்,
பம்பாய்- 12,
18-2-33

அன்புள்ள சாவர்க்கர்,

ரத்னகிரிக் கோட்டையில் தீண்டப் படாதவர்களுக்கான கோயிலைத் திறக்க எனக்கு அழைப்பு விடுத்த உங்கள் கடிதத்திற்கு மிகுந்த நன்றி. ஏற்கெனவே ஒத்துக்கொண்ட சில நிகழ்ச்சிகள் இருப்பதால் உங்கள் அழைப்பை ஏற்க முடியாமைக்கு வருந்துகிறேன். எனினும், சமூகச் சீர்த்திருத்தப் பாதையில் நீங்கள் மேற்கொள்ளும் வேலைகளுக்கு என்னுடைய பாராட்டைத் தெரிவிக்க இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்கிறேன். தீண்டப்படாதவர்களின் பிரச்சினை என்று நான் பார்க்கும் விஷயங்களை, உண்மையில் இந்து மதத்தை மறுகட்டமைப்புச் செய்வதோடு தொடர்புடைய கேள்விகளாகவே உணர்கிறேன். தீண்டப்படாதவர்கள் இந்துச் சமூகத்தில் ஒருங்கிணைய வேண்டுமென்றால், வெறுமனே தீண்டாமையை மட்டும் ஒழித்தால் போதாது, சதுர்வர்ணக் கோட்பாட்டையே ஒழிக்க வேண்டும். அல்லாமல் அவர்கள் இந்துச் சமூகத்தின் வெறும் பின்னிணைப்பாகவே இருப்பார்களென்றால் கோயிலைப் பொறுத்தவரை தீண்டாமை தொடரவே செய்யும். இதை உணர்ந்துகொண்ட வெகுசிலரில் நீங்களும் இருப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். தகுதி அடிப்படையில் சதுர்வர்ண உளறலை இன்னமும் போற்றும் உங்கள் தன்மை துரதிர்ஷ்டவசமானது. இருந்தும் சிறிது காலங்களுக்குப் பிறகு தேவையற்ற சேட்டையான இந்தப் பிதற்றலை நீங்கள் கைவிடுவீர்கள் என நம்புகிறேன்.



வாழ்த்துகள், உங்களை மற்றொரு சந்தர்ப்பத்தில் சந்திப்பேன் என்ற நம்பிக்கையில்.

உண்மையுள்ள,
**பி.ஆர். அம்பேத்கர்**

(அம்பேத்கர் கடிதங்கள், காலச்சுவடு பதிப்பகம்-பக்கம்: 165)

மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு 1924 ஆம் ஆண்டு விடுதலை பெற்ற சாவர்க்கர், அரசு நிபந்தனைக்கு உட்பட்டு மகராஷ்டிரம், ரத்தினகிரியில் தங்கி இருந்தார். அப்போது சில பணக்காரர்கள் உதவியுடன் 'பதித்பாவன்' என்ற கோயிலைக் கட்ட முன்முயற்சி எடுத்த அவர், கோயில் திறப்பு விழாவில் கலந்துகொள்ள அண்ணல் அம்பேத்கரை அழைத்து ஒரு கடிதம் எழுதி இருக்கிறார். *காரணம் கோயில் திறப்பு விழாவில் தீண்டப்படாதவர்கள் கலந்து கொள்வதனால்*

இதன்மூலம் சாவர்க்கரின் வரலாற்றாசிரியர் தனஞ்சய்கீர், அம்பேத்கரும், சாவர்க்கரும் இந்துசமுதாயத்தைச் சீர்படுத்தப் பாடுபட்டதாக சித்திரிக்க முயற்சி செய்துள்ளார் என்பதை கவனிக்க வேண்டும். தனஞ்சய்கீர் ஒரு சாவர்க்கரியவாதி என்கிறார் எஸ். வி.ராஜதுரை.

சாவர்க்கரின் அழைப்புக் கடிதத்திற்கு (இக்கட்டுரையின் தொடக்கத்தில் காணும்) அம்பேத்கர் 18-02-1933 அன்று பதில் எழுதியிருக்கிறார். அந்தப் பதில் கடிதத்தின் பிற்பகுதியில் அம்பேத்கர் இப்படிச் சொல்கிறார் :

"........தீண்டப் படாதவர்கள் இந்து சமூகத்தில் ஒருங்கிணைய வேண்டும் என்றால் வெறுமனே தீண்டாமையை மட்டும் ஒழித்தால் போதாது, சதுர்வர்ணக் கோட்பாட்டையே ஒழிக்க வேண்டும். அல்லாமல் அவர்கள் இந்து சமூகத்தின் வெறும் பின்னிணைப்பாகவே இருப்பார்கள் என்றால் கோயிலைப் பொறுத்தவரை தீண்டாமை தொடரவே செய்யும். இதை உணந்துகொண்ட வெகுசிலரில் நீங்களும் இருப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

தகுதி அடிப்படையில் சதுர்வர்ண உளறலை இன்னமும் போற்றும் உங்கள் தன்மை துரதிர்ஷடமானது. இருந்தும் சிறிது காலத்திற்குப் பிறகு தேவையற்ற, சேட்டையான இந்தப் பிதற்றலை நீங்கள் கைவிடுவீர்கள் என நம்புகிறேன்.

என்று சொல்லி இந்துமகாசபைத் தலைவர் சாவர்க்கர் அழைப்பை நிராகரித்தார் புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர்.